வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 83 /2020

வழக்கு சாட்சி LW1/ PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சம்பூரணம் | ஜாதி | |
| கணவர்/தந்தை | காமராஜ் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 60 |

தேதி 20.08.2025

எதிரி ஆஜர் இல்லை.

சாட்சி மனு அனுமதிக்கப்பட்டு மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் எனக்கு என்ன உறவு முறை என்றால் சகோதரர்கள் மற்றும் உறவினர்கள். சொத்துத் தொடர்பாக எனக்கும் எதிரிகளுக்கும் சிவில் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். 3வது எதிரி முருகேசன், கத்தியைக் கொண்டு என்னை வெட்டுவதாக மிரட்டினார் என்பதை முதல் தகவல் அறிக்கையில், போலீஸ் விசாரணையின் போது நான் கூறினேனா என்றால் கூறினேன். முதல் விசாரணையில் மட்டுமே கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் தகவல் அறிக்கையிலும், போலீஸ் விசாரணையிலும் 3வது எதிரி வெட்ட வந்தார் என்பதை கூறவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் தகவல் அறிக்கையிலும், போலீஸ் விசாரணையிலும் 1முதல் 4 எதிரிகள் அடித்தார்கள் என்பதை கூறாமல் முதல் விசாரணையில் மட்டும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் போலீஸ் விசாரணையில் எனது மகளை தவறாக படம் எடுத்தார்கள் என்பதனை கூறாமல் முதல் தகவல் அறிக்கையில் மட்டும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. போலீஸ் விசாரணையில் எனது மகள் சரளா தன்னை தவறாக படம் எடுத்தார்கள் என்று கூறவில்லை என்றால் சரியல்ல. சரளா நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் அவள் வருவதற்கு அசிங்கப்படுகிறாள். நான் தவறாக படம் எடுத்ததாக பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் தகவல் அறிக்கையிலும், போலீஸ் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் முன்னுக்குப்பின் முரணாக வாக்குமூலம் கொடுத்துள்ளேன்

என்றால் சரியல்ல. சொத்துப்பிரச்சனைக் காரணமாக எதிரிகள் மீது நான் பழிவாங்கும் நோக்கத்தோடுக் கொடுத்த பொய்யான புகார் மீது பதிவுச் செய்யப்பட்ட பொய்யான வழக்கு இது என்றால் சரியல்ல. பழனி, சுந்தரம், பத்மா, சுமதி, வழக்கு சம்மந்தமாக தங்களுக்கு தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து நான் பொய்யான புகார் அளித்து அதில் பதிவுச் செய்யப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.